திரு. கே. பி. எஸ். மணி : சாதாரண சர்க்காவைக் காட்டிலும் அம்பர் சர்க்கா பயனுடையது. அவை முறையாக விநியோகிக்கப்பட்டு, செயல்படுத்தப்படாத காரணத்திஞல்தான் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே இதைச் சீராக விநியோகிக்கவும், மக்களுக்கு உற்சாகம் அளிக்க கட்டாயப் படுத்தாமல் விரும்பிக்கேட்கிற மக்களுக்கு இலவசமாகவே விநியோகிக்கவும் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றி நிச்சயமாகக் கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விஞக்கள்—விடைகள் முடிவு அடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(அ) பல்லடம் தொகுதியில் போலீஸ் நடவடிக்கையினுல் உணவு தானியங்கள் கிடைக்காமை.

***திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதியில் கடந்த 1967 ஜுலை 7-ம் தேதி பல்லடம் தாலுகா சூலூர் சந்தைக்கு உணவுப் பொருள் (அரிசி, சோளம்) கொண்டு வந்த லைசென்சு பெற்ற வியாபாரிகளையும், விவசாயிகளையும் மேற்படி சந்தையில் உணவு தானியம் வாங்கிக்கொண்டு சென்றவர்கள் $\frac{1}{2}$ மூட்டை, $\frac{1}{4}$ மூட்டை வாங்கி வண்டியில் போட்டுக்கொண்டு போன வண்டிக்காரர்கள் மீது போலீஸார் நடவடிக்கை எடுத்து இருக்கிருர்கள்.

பல்லடம் தாலுகா கட்டுப்பாடு நீக்கப்பட்ட பகுதி. அது குடும்பக் கார்டு உள்ள பகுதி. ஆனுல் அரிசி போடுவதில்லை. ஆனுல் அந்த மக்கள் சந்தையிலும், கடைகளிலும் தான் உணவு தானியம் வாங்க வேண்டும். இதனுல் சந்தை முதலியவற்றில் உணவு தானியம் கிடைக்கவில்லை. போலீஸ் நடவடிக்கையினுல் சந்தைக்கு வருகின்ற உணவு தானியம் தடைபட்டதினுல் உணவுப் பொருள் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிருர்கள்."

இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சினையை விவாதிக்க இச்சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே பலமுறை சொல்லியுள்ள காரணங்களினுல், இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பதற்காகப் பேரவையின் இதர அலுவல்களைத் தள்ளி வைக்கத் தேவையில்லை என்பதால், அதற்கு எனது அனுமதியைக் கொடுப்பதற்கு மறுக்கிறேன். முற்பகல் 1–00

(இ) சென்னை நகர் தீ விபத்துக்கள் பற்றி போலீஸ் துறைத் தலைவரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிருர்கள்.

At this stage of considering whether the adjournment motion is admissible or not, the Member should confine himself to explaining how the subject cames within the scope of an adjournmenta motion and not go into the details of the adjournment motion itself.

முன்னுல் கொடுக்கப்பட்ட சபாநாயகருடைய தீர்ப்பை இப்பொழுது வாசித்தேன். அதன்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தங்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து how this is admissible என்பதைச் சொல்லவேண்டும்.